RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2175

OPEN ACCESS

# திருமந்திரமும் - பிராசாத யோகமும்

**ர. அரவிந்த். [அ, *], த. தனராசு [அ]**

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா.

# Thirumantiram and Prasada Yoga

**R. Aravinth [a, *], T.Thanarasu [a]**

[a] PG and Research Department of Tamil, Government Arts & Science College for Men, Krishnagiri-635001, Tamil Nadu, India

* Corresponding Author: arivukamaiyarasu.ta@Gmail.Com

Received: 24-08-2022
Revised: 17-10-2022
Accepted: 29-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

Mystic syllable is the god of all universes. It includes both living and non-living things. Among them, the universal law is that what is born dies and what dies is born. Siddhas are those who have a different lifestyle and they followed some kind of Thavam in their life. They believed Thavam is the only solution to attain God. All these are the constituents of the Agamas given by God. Overall, there are 28 agamas. Thavam is the only way to merge with God. Shiva is the one who first preached to Parvati. Subsequently, Nandi received nine Agamas among them. Among them Thirumular provides Thirumantram. Among them Atanga Yoga, Kesari Yoga, Parianga Yoga, Kundalini Yoga, Prasada Yoga are the ways to reach God. Among these Prasada Yoga gives a blissful life. With reference with the texts given by Thirumoolar and Siddhars this article briefly explains Prasada Yoga its duration of meditation, sound, spiritual experience, benefits, etc.

**Keywords:** Thirumoola Thirumantram, Prasada yogam, Aatharam, kalai, Prasada yogam

## முன்னுரை

ஆதாரமாய் அமர்ந்த அப்பா போற்றி! நிராதாரமாய் நின்ற நின்மலா போற்றி!! உலகத்தோற்றத்துக்கு ஆதாரமாய் நின்றவையே, உலக ஒடுக்கத்துக்கும் மூலமாய் அமைகின்றது. உயிர்களுக்குப் பற்றியுள்ள மலப்பற்றைப் போக்குவதற்கு ஆதாரமாய் உலகத்தை இறைவன் படைத்தான். உயிர்கள் பயனை அடையும் போது அவ்வுயிர்க்கு விடுதலை அளித்து தன்னோடு ஐக்கியம் செய்துக்கொள்கிறார். பிற உயிர்கள் பக்குவம் பெறும் பொருட்டு உலகங்களைக் காலத்திற்குத் தகுந்தாற்போல மாற்றங்கள் செய்யும் பொருட்டு உலகங்களை ஒடுக்கி மீண்டும் படைக்கின்றார். இந்நிகழ்வு முடிவிலியாகும். அவ்வாறு உயிர்கள் தங்களுடைய மும்மலத்தையும், அவற்றால் விளைந்த வினைப்பயனையும் தீர்ப்பதற்குச் சைவம் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதைகளை விளக்குகின்றது. அவற்றுள் தன்வினைக் கழியவும், உயிர் ஞான பிரகாசம் பெறவும், இறைநிலையில் ஒன்றவும் யோகமார்க்கமே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. யோகம் என்றால் ஒன்றுதல் என்று பொருளாகும். ஆகவே சிவத்துடன் ஒன்றுவது சிவஞானமாகும். இச்சிவஞானத்தை இறைவனால் அருளப்பட்டு, அருளாளர்கள் வழி உபதேசிக்கப்பட்ட யோகக் கலைகள் வாழும் கலைகளாக இல்லை என்றாலும் ஆங்காங்கே உயிர்தாகம் உள்ள சிலர் முயற்சித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவ்வகையில் திருமூலர் அருளிய திருமந்திர பாடல்கள் மற்றும் பிற யோக

நூல்களைத் துணைக்கொண்டு இப்பிராசாத யோக படிநிலைகளையும் அதன் பயனையும் இவ்வுலகத்திற்கு அறியப்படுத்தும் பொருட்டும், அரிதான மானுடம் வாழ்வின் பயனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

## திருமூலர் கூறும் யோக முறைகள்

திருமூலர் திருமந்திரத்தின் வாயிலாக மானுடம் தன்னுடைய வாழ்வின் நிலையாமையினை உணர்வதற்கான நல்லுபதேசங்களைச் செய்து இவ்வாழ்வில் இருந்து விடுபடுவதற்கான வழியைக் கூறியுள்ளார். அவை, குண்டலினி தவம், ஆக்ஞைத் தவம், ஆறாதாரத்தவம், துரிய தவம், துரியாதீத தவம், கேசரி யோகம், சந்திர யோகம், பரியங்க யோகம், பிராசாத யோகம் போன்ற முறைகளைப் பின்பற்றி வாழ்வின் வழியறியும் கலைகளைக் கொடுத்துள்ளார். அவற்றுள் உயர்ந்ததாகக் கருதப்படுவது பிராசாதயோகமேயாகும்.

## பிராசாத யோகம்

சைவ சமயத்தில் உயிர்களை உய்விக்கும் நெறிமுறைகளில் ஒன்று யோக நெறியாகும். யோக நெறி என்றாலே நம் அனைவருக்கும் நினைவிற்கு வருவது பதஞ்சலி யோகமும், திருமந்திரம் கூறும் யோகமுறையும்தான். ஆனால், பதஞ்சலி யோக சூத்திரங்களில் காணப்படாத ஒரு யோக முறை திருமூலர் திருமந்திரத்தில் காணப்படுகின்றது. அவை, பிராசாத யோகமாகும். இந்த யோகம் மூலம் "உடலினுள்ளே மூலாதாரம் முதல் பிரமாந்திரம் ஈராக வாயுக்களை நிறுத்தி ஆன்மா அடியார்களுக்கு எளியவனாகிய சிவபெருமானைத் தரிசித்து அவருடனே ஒன்றும் பாக்கியம் கிட்டும்." (Srimath Kuruganasampantha Swamigal, 1900).

ஆதார யோக நிலையில் சித்தியடைந்தவர்களுக்கே பிராசாத யோகம் கைக்கூடும். அன்றி எழுதிப்படித்துத் தெரிந்துக்கொண்டு சாதிக்கவல்லவர்களுக்கு சாத்தியப்படாது. யோகமெல்லாம் ஆசானிடமிருந்து முறையாக அதனதன் தத்துவங்களைக்கேட்டு அறிவதாகும்.

இப்பிராசாத யோகமானது தலையில் இருந்து கலைகளை அடிப்படையாகக் கொண்டு தியானிக்கப்படும் பொருண்மைக்கேற்ப வகைப்படுத்துகின்றனர் ஆராய்ந்தறிந்த ஞானிகள்.

## பிராசாதம் - பொருள் விளக்கம்

பிராசாதமென்பது, பிரா - சிவஞானம், சா- கதி, தம் - தருவது, எனவே சிவஞான கதியாகிய மோட்சத்தைத் தருவதென்பதாகும்.

மேலும், பிராசாதம் என்பதற்கு அகராதி, கோயில் - Temple, கருவறை - The Sanctum sanctorum moat Temple, உபரிகை - The Story of a Lofty Building, மந்திரம் - Mantra என்னும் பொருளைத் தருவதாகக் காணப்படுகின்றன.

## பிராசாத யோக நூல்கள்

- திருமூலர் - திருமந்திரம்.
- பிராசாத சட்சுலோகி. இது முதல் நூலாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாணப் பதிப்பு.
- காழிகண்ணுடைய வள்ளலார் மரபில் வந்த ஒருவர் அருளிய பிராசாத தீபம்.
- காவை அம்பலவாணர் அருளிய பிராசாத அகவல்.
- பிராசாத மாலை - திருக்கயிலாயபரம்பரை தருமபுர ஆதினத்தின் பிரதான ஆச்சாரியரும், ஞானசம்பந்தரது குருவான கமலை ஞானப்பிரகாசதேசிகர் ஆவார். இவை 12 விருத்தங்களால் ஆனாது. பிற்காலத்தில் இவற்றை 39 செய்யுளாகக் கொண்டு விரிவுபடுத்தியுள்ளனர்.

## ஆதாரம் - நிராதாரம் - மீதானம்

“மனித இலிங்கத்தின் அடிப்பகுதியாக விளங்கும் ஆதாரத்தானம் ஆறுவகையாகும். அவை, 1.மூலாதாரம் - குதத்திற்கும் குறிக்கும் இடையில் உள்ளது. 2.சுவாதிட்டானம் -குறிக்கும் மேலும், நாபிக்குக் கீழுமாக இரண்டிற்கும் இடையில் உள்ளது. 3.மணிபூரகம் - நாபிதானம் - தொப்பூழ். 4.அநாகதம் - இருதயத்தானம். 5.விசுத்தி- கண்டத்தானம். 6.ஆக்ஞை- புருவ மத்தியதானம்.”(Ramakrishnan, 2004)

## நிராதாரம்

நிராதாரத்தை மேலாதாரம் என்றும் கூறுவர். இங்கு இறைவன் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகத்தோடும் ஐந்து வண்ணத்தோடும் இருத்தல் நிராதாரமாகும்.

## மீதானம்

நிராதாரத்தில் இருந்து ஒரு சாண் உச்சிவரை அமைந்த இடம் மீதானம். ஞானசம்பந்தர் இதனைத்,

‘திருஉச்சியார்’ (02:09:01:01)

என திருநெல்வாயில் பதிகத்திலும்,

‘சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னி மன்னினான்’ (02:60:01.01)

என திருப்பாசூர் பதிகத்திலும்,

‘ஊனிடங்கொண்டென் உச்சியில் நிற்பரே’ (03:43:02:04)

என சீர்காழி பதிகத்திலும்,

‘தண்ணியான், வெய்யான் நம்தலைமேலான் மனத்துளான்’ (01:61:06:1-2)

என திருச்செங்காடு பதிகத்திலும்,

‘ஊன் நயந்து உருக உவகைகள் தருவார், உச்சிமேல் உறைபவர்’ (01:77:02:02)

என திருஅச்சிருப்பாக்கம் பதிகத்திலும் திருஞானசம்பந்தர் கூறுகிறார். மேலும், அப்பர்,

“அந்தமாதி அயனும்மாலும் ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின மேலுந் சென்னியு மன்னினான்” (01:73:09:1-2)

என்றும் மேலும் சுந்தரர்,

‘உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியார்’ (07:92:4:01)

என திருப்புக்கொளியூர் பதிகத்திலும்,

மேலும், மாணிக்கவாசகர்,

‘நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்’ (08:40:07:02)

என வரும் பாடல்களின் வழியிலும், மேலும், மீதானம் என்னும் மூன்றாம் தானத்தில் இறைவனும் இறைவியும் குடிகொண்டிருக்குமிடம் என்பதை சமயக் குரவர்கள் நால்வர் வாக்காலும் மெய்ப்பிக்கப்படுகிறது.

## பிராசாத யோகத்தின் வகை

“சோடச பிராசாத சட்சகம் நூலிற்கு முகப்புரை எழுதிய சோமசுந்தர தேசிகர், பிராசாத கோசர முதல் பிராசாத விருதயம் ஈறாக இருபத்துநான்கு என வகைப்படுத்தியுள்ளார்.

அவை, பிராசாத கோசரம், பிராசாத சுந்தரம், பிராசாத சேகரம், பிராசாத ஸௌரம், பிராசாதம், பிராசாத பெந்தனம், பிராசாத புசங்கம், பிராசாத சந்திரம், பிராசாத கமலம், பராசாத வித்தியாதரம், பிராசாத பூணம், பிராசாத சூத்திரமணி, பிராசாத காந்தம், பிராசாத விக்ஞானம், பிராசாத சிந்தாமணி, பிராசாத தீபகம், பிராசாத கமலானந்தம், பிராசாத புவனம், பிராசாத மஞ்சரி, பிராசாத கவசம், பிராசாத ரத்னகவசம், பிராசாத கௌஸ்துபம், பிராசாத குண்டலம், பிராசாத இருதயம், என்பனவாகும்.” (Srimath Kuruganasampantha Swamigal, 1900)

மேற்கண்ட “பிராசாத வகையினை காலபேத (காலம், அளவு, தன்மை) எட்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. கலை என்றால் கூறு என்று பொருளாகும். அவை, திரிகலைப் பிராசாதம், பஞ்சகலைப் பிராசாதம், சத்தகலைப் பிராசாதம், அட்டகலைப் பிராசாதம், நவகலைப் பிராசாதம், தசகலைப் பிராசாதம், துவாதசகலைப் பிராசாதம், சோடசகலைப் பிராசாதம்” (Sivamalliga, 2016).

## திரிகலைப் பிரசாதம்

திரிகலை என்பது அகாரம், உகாரம், மகாரம் என்னும் மூன்று கலைகளைக் கொண்டது. ஓம் என்னும் தூல பிரணவத்தின் விரிவே அ, உ, ம, என்பதாகும்.

### பஞ்சகலைப் பிராசாதம்

அகாரம், உகாரம், மகாரம், தூல விந்து, தூல நாதம் என ஐந்துக் கூறுகளைக் கொண்டது. இவ்வைந்தும் ஆக்ஞைத் தானத்தில் வைத்து உணர்ந்து காணக் கூடும். இவ்வைந்துக் கூறுகளை மட்டும் தியானப் பொருளாக எடுத்துக்கொள்வது பஞ்சகலைப் பிராசாதமாகும்.

### சத்தகலைப் பிராசாதம்

பஞ்சகலைப் பிராசாதக் கூறுடன், சூக்கும விந்து, சூக்கும நாதம் என ஏழு கூறுகளைக் கொண்டு அனாகதம் முதல் ஆக்ஞைக்கு மேல் பகுதி வரையில் வைத்துத் தியானிப்பது சத்தகலைப் பிராசாதாமாகும்.

### அட்டகலைப் பிராசாதம்

சத்தகலைப் பிராசாதக் கூறுடன் அதிசூக்கும விந்துவுடன் எட்டு கூறுகளைக் கொண்டது. ஏழு கூறுகளைக் கடந்து விந்துவை மட்டும் அதிசூக்குமமாகத் தியானிப்பது.

### நவகலைப் பிராசாதம்

அட்டகலைப் பிராசாதக் கூறுடன் அதிசூக்கும நாதத்தையும் சேர்த்து தியானிப்பது நவகலைப் பிராசாதமாகும்.

## தசகலைப் பிராசாதம்

நவகலைப் பிராசாதக் கூறுடன் வியாபினி என்ற சுத்தமாயையைச் சேர்த்து தியானிப்பது தசகலைப் பிராசாதமாகும். இது பத்துக் கலைகளைக் கொண்டது.

## துவாதசகலைப் பிராசாதம்

தசகலைப் பிராசாதக் கூறுடன் வியாபினி என்பதைக் காரிய நிலையாக்கி காரண நிலையின் சூக்குமம், அதிசூக்குமம் (சமனை, உன்மனை) என இரண்டையும் இணைத்து பன்னிரண்டு கூறுகளாக தியானிப்பது துவாதசகலை பிரசாதமாகும்.

## சோடசகலைப் பிராசாதம்

துவாதசகலைப் பிராசாதம் பன்னிரண்டு கூறுகளுடன் மேலும், வியோம ரூபினி, அநந்தை, அநாதை, அனாசிருதை என்னும் கலைகளைச் சமனைக்கு முன்பாக சேர்த்துப் பயிலப்படும் கலை சோடசகலையாகும் இவை பதினான்கு கூறுகளைக்கொண்டது. இக்கலையே உயிர் வீடு பேற்றிற்கு உதவிடும் உண்மை மார்க்கம் என திருமூலர் எடுத்துரைக்கிறார்.

மேலும், "இத்துடன் கூறப்பட்ட சோடசகலைப் பிராசாதத்தினைக் குருவருளால் பெற்று ஒன்றிரண்டு மூன்று முதலிய கலைகளில் பயில்வோர் முறையே ஒன்றிரண்டு மூன்றாம் ஒழுக்கத்தில் ஒருவர் இருவர் தனித்துஞ் சேர்ந்தும் இவ்வாறு சோடசாந்தம் வரை சோபானக் கிரமமாய்த் திருக்கூட்டத்துச் சிவஞான யோகிகள் பலர் இருந்து நிட்டை புரிந்த தானமே பதினாரு ஒடுக்கம் என்று சொல்லப்படுகிறது." (Srimath Kuruganasampantha Swamigal, 1900)

"அவை, அகாரம், உகாரம், மகாரம், தூல விந்து, தூல நாதம், சூக்கும விந்து, அதிசூக்கும விந்து, சூக்கும நாதம் அதிசூக்கும நாதம், வியாபினி, வியோமரூபிணி, அநந்தை, அநாதை, அனாசிருதை, சமனை, உன்மனை என பதினாரு வகைப்படும்." (Sivamaliga, 2016) இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலைக்கு உண்டான தேவதை, நிற்கும் தானம் (இடம்), தியானிக்கப்படும் அளவு பொருத்து மாற்றம் அடைகின்றன.

அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்று கலைகளைக்கொண்டது. அ,உ,ம இவை மூன்று கூறுகளும் அடங்கியதே ஓம் எனும் தூல பிரணவமாகும். இவற்றை திருமூலர்,

"தூலப் பிரணவம் சொரூபானந்தப் பேருரை

பாலித்த சூக்குமம் தேலைச்சொரூபப் பெண்

ஆலித்த முத்திரை ஆங்குஅதில் காரணம்

மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே" (Sivamaliga, 2018)

என்னும் பாடலில் தூலப்பிரணவம் - வரிவடிவாகிய 'ஓம்' என்னும் பிரணவ மந்திரம் பரு உடலுக்கு இன்பம் தரும் இனிய சொல் ஆகும். நுண்ணுடலைக் காக்கின்றது. மேலும், இதுவே மேலான பாராசக்தியின் இன்னருளாகும். களிப்பு தரும் சின் முத்திரை சூக்கும பிரணவத்துக்கு மூலமாகும் என்கின்றார். மேலும், பிரணவத்தினைப் பற்றி, 2676, 2677, 2678, 2679, 2680 ஆகிய திருமந்திரப் பாடல்களில் விளக்கியுள்ளார்.

'அ'காரம் - நாபி இருப்பிடமாகவும், அக்கினிக்கொழுந்தைப் போன்று பிரகாசமாகவும், பிரம்மாவை அதிதேவதையாகவும் கொண்டவை. 'உ'காரம் - இருதயத்தை இருப்பிடமாகவும், சந்திர சூரியன் போன்ற பிரகாசமாகவும், விட்ணுவை அதிதேவதையாகவும் கொண்டவை. 'ம'காரம் -கண்டத்தை இருப்பிடமாகவும், மின்னல் போன்ற பிரகாசத்தையும், உருத்திரனை அதிதேவதையாகவும் கொண்டவை.

## தூல விந்து, தூல நாதம்

ஓம் எனும் தூலத்தின் சொரூபமாக நாத விந்து அமைந்துள்ளன. நாதம் - ஓசை என்றும், விந்து - அருள் ஆற்றலாகிய ஒளி என்றும் கூறப்படும். இவை முறையே சிவசக்தி என்றும் கூறப்படும்.

யோகிக்குக் குண்டலினி ஆற்றல் ஆக்ஞையில் வந்து நிலை கொள்ளும் பொழுது, யோகி ஒளி, ஓசை இரண்டையும் காணவும், உணரவும் முடியும் என்பதை,

"மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்

விண்ணில் எழுந்து சிவாய நமவென்று

கண்ணில் எழுந்தது காண்பரி தன்றுகொல்

கண்ணில் எழுந்தது காட்சி தரஎன்றே" (Sivamaliga, 2018)

என்னும் பாடல் வழி அறியலாம்.

மேலும், மூலாதாரத்தில் (மண் பூதம்) எழுந்த அகார உகாரங்கள் கழுத்திற்குமேல் (விண்) சிரசை அடையும் பொழுது சாதகனுக்கு இறைவனின் திருவடி தரிசனம் கிடைக்கப்பெறும். முயற்சியுடைய யோகியானவனுக்கு இது அரிதன்று. அவ்வாறு புருவ மத்தியில் எழுந்தது யோகிக்குக் காட்சி கொடுப்பதற்காகத்தான். இக்காட்சியைப் பெறுவதற்கு ஆதாரத்தோடு கூடிய ஆதார யோகம் அறிந்திருக்க வேண்டும். இக்காட்சி கிடைக்கப்பெற்ற யோகி இந்நிலையிலிருந்தே பிராசாத யோகத்தைத் தொடங்குவார்.

## சூக்கும விந்து, அதிசூக்கும விந்து

ஆக்ஞையில் தூல விந்து நாதத்தை உணர்ந்தும், கண்டும், கேட்டும் அனுபவப்பட்ட வழி ஆக்ஞைக்கு மூன்று விரல் மேல் சூக்கும விந்துவும் அதிசூக்கும விந்துவை உணரலாம். இது புகை நிறமாகக் காணப்படும். இவ்விடத்தில் அரை மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும். இதைக் குறிப்பது தான் நெற்றியில் பூசப்படும் திருநீறு.

ஓங்காரத்தை நாம் மேலே குறிப்பிட்டபடி ஓதினால் நெற்றியில் அதிசூக்கும ஒளி உணரப்படும். இதுவே மாயையில் இருந்து உயிர்க்கு பாதுகாப்பு கவசமாக விளங்கும். இதனை, திருவாசகத்தில்,

"ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்" (08:46:01:03)

என பாடல் வரிகளில் அறியலாம். மேலும் அக்கவசம் உயிரை உலகப் பற்றிலிருந்து காத்து இறைவன் திருவடிக்கு அழைத்துச் சென்றுவிடும். எனவே தான் "இந்நிலை நிரோசாதம், நிரோதினி, நிரோதி எனவும் குறிப்பிடப்படுகிறது." (Sivamaliga, 2016)

## சூக்கும நாதம்

சூக்கும நாதம் அதிசூக்கும விந்துவிற்கு மூன்று விரல் மேலே காணப்படும் மாணிக்க ஒளியாகும். இதை கால் மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும். சூக்கும நாதத்திற்குள் அதிசூக்கும விந்துவும் அடங்கியே உள்ளதால் இரண்டையும் சேர்த்தே தியானிக்க வேண்டும்.

## அதிசூக்கும நாதம்

அதிசூக்கும நாதத்திற்கு மூன்று விரல் மேலே மின்னல் கொடிபோல் தோன்றும். அரைக்கால் மாத்திரைக்காலம் தியானிக்க வேண்டும். இவ்வுணர்வு தலையின் உச்சியில் துரியத்தில் நிகழ்வதாகும். இது தலையின் உச்சியாகிய துரியம் என்று சொல்லப்படும் இடமாகும்.

## வியாபினி

அதிசூக்கும நாதத்திற்கு நான்கு விரல் மேலே தோன்றும் ஒளியாகும் இது நூறாயிரம் வாலைச் சூரியன் போன்ற ஒளியை உடையது. அரைக் காணிக்காலம் தியானிக்க வேண்டும். இது ஓசை கடந்த

நிலையாகும். அதாவது, அதிசூக்கும நாதம் ஒடுங்கி நிற்கும் நிலையாகும். யோகியானவன் காதால் அவ்வோசையைக் கேட்க இயலாத, ஒடுங்கிய நிலையாகும். இது மகாசூக்கும நிலை என்று கூறப்படும்.

## வியோமரூபினி

வியோமரூபினி என்பது வியாபினிக்கு ஒரு விரல் மேலே நீல நிறமான ஆகாயம் போன்று காணப்படும். வியோமரூபினி ஞானாகாயம் என்றும் சொல்லப்படும். துரியத்திலிருந்து ஐந்து விரல் மேலே அமைந்துள்ள இடமாகும். இவ்விடத்தில் அதீதத் துரியம் என்று கூறப்படும். இவ்விடத்தை திருமந்திரம் பதினொன்றாம் தானமும் அவத்தை என காணல் என்ற அதிகாரத்தில் பதினொன்றாம் நிலையை,

"புருடனுடனே பொருந்திய சித்தம்

அருவமொடாறும் அதீதத் துரியம்

விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்

அரிய பதினொன்றும்மாம் அவ்வவத் தையே"

என்னும் பாடலில் அறியலாம் (Sivamaliga, 2016).

அதீதத் துரிய நிலையில மனம், புத்தி, சித்தம், அகங்காரம் பொருந்திய புருடன் தணிந்து சூக்குமாய் ஒடுங்கியிருக்கும். இந்நிலையிலிருந்து மனம், புத்தி, அகங்காரம், ஊறு, ஒலி, ஒளி, சுவை, நாற்றம் என புரியட்டகாயமாக விரிவடையும். எனவே, இவ்விடம் அவத்தைக்குட்பட்டது. இந்நிலையிலிருந்து பெயர்ந்து பன்னிரண்டாம் நிலையாகிய அநந்தையை அடைந்துவிட்டால் சிவத்தை உணர முடியும். எனவே, இப்பதினொன்றாம் நிலையை விட்டு கீழே இறங்கினால் பாசத்தானம், மேலே சென்றால் சிவத்தானம் என்பதால் இவ்விடம் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

## அநந்தை

வியோமரூபினிக்கு ஒரு விரல் மேலே கண்ணாடி ஒளி போன்ற நிலை. இவ்விடம் ஞானவாரி என்று சொல்லப்படும். அரை கால் மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும்.

## அநாதை

அநந்தைக்கு ஒரு விரல் மேலே ஞானக்கண்ணாடி என்று சொல்லப்படும் நிலை. அலைகின்ற நீலக்கடல் போன்றதாகும். அரை கால் மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும்.

## அநாசிருதை

அநாதையிலிருந்து ஒரு விரல் மேலே அமையப் பெற்றுள்ள நூறாயிரங்கோடி சந்திரப் பிரகாசமாகும். இதுவும் அரைக்கால் மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும். இக்கூறு பற்றி தத்துவப் பிரகாசம்,

"விற்கொண்ட அநாசிருதை நூறாயிரங் கோடி

விளங்குமதி இவைவிட்டால் சாக்கிராதி

அற்புடன் அங்கு அவை கடந்தால் பரமன் கூத்தாம்

அதில் அழுந்தி அள்நடத்தில் ஒன்றுபட்டுப்

பொற்புடன் இப்பொருளை நீங்காதிருப்பார் தமக்குப்

பூத நாயகன்தன் அருகிருக்கை புகழ்அன்றே”

என்னும் பாடல், இப்பதினான்காவது அநாசிருதையைக் கடந்து விட்டால் சாக்கிராதி ஐந்து அவத்தைகளான சாக்கிரம் அல்லது நனவு நிலை, சொப்பனம் அல்லது கனவு நிலை, சுழுத்தி அல்லது உறக்க நிலை, துரியம் அல்லது பேருறக்க நிலை, துரியாதீதம் அல்லது உயிர்ப்படக்க நிலை என்பவைகள் கடக்கப்பட்டு இறைவன் திருநடனத்தில் ஒன்றுபட்டு திருவடியை விட்டு நீங்காதிருப்பர் என்பதை விளக்குகின்றது.

### சமனை

அநாசிருதையிலிருந்து இருவிரல் மேலே இலட்சம் கோடி உச்சிக்கால சூரிய ஒளியை ஒத்த நிலையாகும். இவ்விடத்தில் மனமிறந்த நிலை இறை தரிசனமும் உடனிகழ்வாக நிழ்வதால் உயிருக்கு ஆனந்த நிலை ஏற்படும். அரைக்காணி மாத்திரைக் காலம் தியானிக்க வேண்டும். இது ஆனந்தத் தானம் என்று சொல்லப்படும்.

### உன்மனை

சமனைக்கு இருவிரல் மேலே தெளிவற்ற இருள் வடிவு ஆகும். இது அருள்தானம் என்று சொல்லப்படும்.

இவ்வாறாக பதினாறு கூறுகளும் நாபி முதலாகத் தலையின் உச்சியிலிருந்து மேலே பன்னிரண்டு அங்குலத்திற்குள் நடைபெறும் அற்புதக் காட்சிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஒளிக்காட்சிகளின் தரிசனப் பயணத்தின் முடிவாக நாம் கிடைக்கப் பெறுவது அற்புதங்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் சிவப்பரப்பொருளேயாகும் என்பதை,

“துரியங் கடந்து துரியா தீதத்தே

அரிய வியோகங் கொண்டு அம்பலத்துஆடும்

பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே

துரிய வல்லார்க்குத் துரிசுஇல்லை தானே” (Sivamaliga, 2016).

என்னும் பாடல், பிராசாத யோகம் கொண்டுதான் ஐந்து அவத்தைகளையும் கடந்து அம்பலத்தாடும் பெரிய பிரானைத் தரிசிக்க முடியும். அவ்வாறு தரிசிப்பவர்களுக்கு மலக்குற்றங்கள் இல்லை என்பதை அறியமுடிகிறது. மேலும், இப்பிராசாத யோகச் சிறப்பையும் பயனையும் பற்றி திருமூலர் தம் நூல் முழுவதும் புகழ்ந்து பாடியுள்ளார்.

## வேதாத்திரியம் கூறும் நவீனக் கால பிராசாத யோகம்

வேதாத்திர மகரிசியானவர் சமீபகாலத்தில் வாழ்ந்து இறைநிலையடைந்த யோகியாவார். தாம் மற்றும் இறைப்பேற்றை அடைந்ததே அல்லாமல் அனைவருக்கும் அதற்குண்டான எளிய யோகமுறைகளை கட்டமைத்த பெருமைக்குறியவர் ஆவார்.

வேதாத்திரியம் பிராசாத யோகத்தை அனைவர்க்கும் எளிமையாக வழக்கத்துக்குக் கொண்டு வரவேண்டும். அனைவரும் பின்பற்றி இறைநிலையை அடையவேண்டும் என்று யோகத்தில் எளிமையை கொண்டுவந்தார். அவை, துரியதவம், பஞ்சபூத நவக்கிரக தவம், பிரபஞ்சக்களம், சிவகளம், துரியாதீதம் என எளிமையான முறைகளை வகுத்தளித்தார்.

துரியம் என்றால் அப்பால் என்று பொருள்படும். துரிய தவம் ஏழாவது ஆதாரமாகிய ஆயிரம் இதழ்த்தாமரையில் மனதை நிறுத்தி ஆற்றுவதாகும்.

பஞ்சபூதமாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் முறையிலும், நவக்கிரகத் தவமானது, சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன், செவ்வாய், குரு, சனி, இராகு, கேது ஆகிய கோள்களின் முறையே அவற்றின் தன்மை, நிறம், பெருமை, மதிப்புப் போன்றவற்றை அறிந்து அவற்றைத் தியானிப்பதாகும்.

பிரபஞ்சக்களம் சூரியக்குடும்பத்தைப் போன்று இருக்கும் பல்வேறு சூரியக் குடும்பத்தைப் பிரபஞ்சத்தில் மனம் வைத்துத் தியானிப்பதாகும்.

“சிவகளம் என்பது சுத்தவெளி என்றும் இறைநிலை என்றும் கூறப்படுகின்றது. இவை பிரபஞ்சகளத்திற்கு அப்பால் உள்ள சுத்த வெளியில் மனத்தை வைத்து தவம் செய்வதாகும். துரியாதீதம் என்றால் அப்பாலுக்கு அப்பால் என்பதாகும். மனமிறந்த நிலையில் உயிர் தன் மூலத்தை உணர்ந்து தன் மூலமாகவே ஆகிவிடுவது. சிவகள பயிற்சியின் தேர்ச்சியே துரியாதீதாமாகும் (Sivamaliga, 2018).

பிராசாத யோகமும் வானியலும்

“யோகியானவன் தன் உயிரொளியைப் பற்றுக்கோடாகக் கொண்டு சிவத்தை அடைய மேற்கொள்ளும் பயணத்தில் காணும் ஒளிமண்டலங்களை வானியலார் தொலைநோக்கிக் கருவிகள் கொண்டுக் கூறியுள்ளனர். யோகிகள் ஒளி அனுபவங்களையும், வானியலார் சொல்லும் ஒளிக்காட்சிகளையும் கீழே ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

| பிராசாத யோகம் | வானியல் |
| --- | --- |
| மாணிக்க ஒளி என்பது உயிரொளியாகக் காணலாம். இதன் பயணத்தில் காணும் முதற்காட்சி மின்னற்கொடி ஒளி | நட்சத்திரங்களின் ஒளி முடிச்சு (Group of stars or clusters of stars) |
| நூறு கோடி சூரியப் பிரகாசம் | நட்சத்திரங்களின் ஒளி முடிச்சுகளின் முடிச்சு (Group of Clusters of Nebula) |
| நூறாயிரம் வாலைச் சுரிய ஒளி | நெபுலாவின் கும்பல் சேர்ந்தது பால்வெளி மண்டல முடிச்சு (Group of Nebula is called Galaxy) |
| நூறாயிரம் உச்சிக்காலச் சூரிய ஒளி | பால்வெளி மண்டல முடிச்சுகள் சேர்ந்தது (Group Of Galaxy is called milky way) |
| தெளிவற்ற இருள் வடிவு | பால்வெளி மண்டலங்கள் அடங்கிய பேரண்டம் (Universe) |

இவ்வாறாக பிராசாத யோகத்தின முறைகளும் அனுபவங்களும் சைவாகமங்களில் காணப்டுகின்றன.” (Sivamaliga, 2016).

வானியலார் கருவிகளால் கண்டு சொன்னதை, காலத்தால் முற்பட்டு தோன்றிய காலத்தை நிர்ணயம் செய்ய முடியாத மெய்ஞ்ஞான நூல்களாகிய சிவாகமங்கள் எடுத்து வைக்கின்றன. இந்த யோகம் மட்டுமல்லாது குண்டலினி யோகம், ஆதார யோகம், பரியங்க யோகம், கேசரி யோகம் போன்ற மிக அற்புதமான யோக முறைகளும் சிவாகமங்களிலிருந்தே பெறப்பட்டன.

“கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்

தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி” (Sivamaliga, 2018)

என யோகங்களை திருமந்திரத்தில் விரிவாக காணமுடிகிறது.

## பிராசாத யோகத்தின் சிறப்புகள்

யோகங்களில் பிரசாத யோகமே ஞானம் தரும் என்பதால் சைவ சமய நூல்கள் இதைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவற்றை திருமூலர்,

“முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்

தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி

மெய்த்தவம் செய்கை வினைவிட்ட மெய் உண்மைப்

பத்தியில் உற்றோர் பரானந்த போதரே” (Sivamaliga, 2018)

என்னும் பாடலில், முத்தியாகிய வீடுபேற்றைப் பெறுவதற்காகச் சீவர்கள் சிவப்பரம்பொருளின் முழு அருளையும் பெற்று, தத்துவ அறிவுகளை விட்டொழிந்து விட்டு, தன்னுடைய கடமை இறைவனை எண்ணித் தவமிருந்து, தூய மனத்துடன் தியானித்திருப்பது என்பதை உணர்ந்து, மனத்தூய்மையுடன் இறைவனிடம் அன்பு கொண்டு செய்பவர்கள் உயர்ந்த பேரின்ப நிலையான பரமானந்த சித்தி பெறும் சிவஞானியர்கள் ஆவார்கள். மேலும், யோகத்தில் சிறந்தவை பிராசாத யோகம் என்பதை,

“யோகத்தில் யோகம் நிராதாரமே அதுதான்

இரண்டற்றுத் தூங்குவதென்று இசைக்கும் நூலே”

என்று தத்துவ பிரகாசம் நூல் ஆதாரம் கண்டு நிராதாரத்தில் இறைவனை தியானிப்பதே சிறந்த யோகம் என்கிறது.

குண்டலியோகம் செய்பவர்கள் மனோன்மணியைத் தலையில் வைத்தும் மேலும் மற்ற சக்திகள் எட்டையும் வரிசையாக மேலே வைக்க எண்ணி உடம்பின் எட்டுக் கலைகள் நிற்கச் செய்தார் நந்தி என திருமூலர்,

“பரைச்சதம் எட்டுமுன் பேசிய நந்தி

நிரைத்து நியதி நியமஞ்செய் தானே” (Sivamaliga, 2018)

என்னும் பாடலில், மேலான சக்தியே எல்லா நிலைகளிலும் துணைநின்று உயிரை பக்குவப்படுத்தி மேம்பாடு அடையச் செய்கின்றாள். மேலும், அவ்வாறு இறைவனை தியானிப்பவர்கள். பலகோடி காலம் வாழலாம் என்பதை,

“காத்துட் லுள்ளே கருதி இருந்தவர்

மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே” (Sivamaliga, 2018)

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

வேள்வித் தீயில் தேவர் பலரை வழிபடுவதைவிட பிராசாதக் கலையில் உடலையே வேள்விக் குண்டமாகக் கொண்டு இறைவனை வழிபடவேண்டும் என்பதை,

“எடுத்தஅக் குண்டத்து இடம் பதினாறில்

பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்

கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே

கொதிதெழும் வல்வினை கூடகி லாவே” (Sivamaliga, 2018)

“மேலஞ்சும் ஓடி விரவவல் லார்க்குக்

காலனும் இல்லை கருத்தில்லை தானே” (Sivamaliga, 2018)

என்னும் பாடலில் உடலை வேள்விக் குண்டமாகக் கொண்டுத் தவம் இயற்றவல்லோனுக்குக் காலனால் வரும் இறப்பும் இல்லை, வலிமையான முக்கால வினை அவனை ஒருபோதும் நெருங்காது அழிந்தொழியும் என்கிறார். மேலும், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் அகப்பகைவர்கள் நீங்கப்பெற்று, சிவானந்தம் தலைப்படும் என்பதை,

"ஆறு பறவைகள் ஐந்துஅகத்து உள்ளன

நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன

ஏறும் பெரும்பதி ஏழும் கடந்தபின்

மாறுதல் இன்றி மனை புகலாமே" (Sivamaliga, 2018)

என்னும் பாடலில் விளங்குகிறார். மேலும், முதலில் சக்தியாகிய குண்டலியைக் கலந்து அதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு சிவத்தை அடைவதற்குரிய சிறந்த யோகம் பிராசாத யோகமாகும் என்பதை,

"அதுவிது என்று அவமே கழியாதே

மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்

பதிமது மேவிப் பணிய வல்லார்க்கு

விதிவழி தன்னையும் வென்றிடலாமே" (Sivamaliga, 2018)

என்னும் பாடல் தேன் சிந்தும் மலர் சூடியக் கருங்கூந்தலுடைய அன்னை சக்தியை சந்திர மண்டலத்தில் பொருந்தி வழிபட வல்லவர்க்கு விதியையும் வெல்லும் ஆற்றல் கிட்டும் என்கிறார்.

பிராசாத யோகத்தால் அன்றிக் குண்டலினி சக்தியைத் தலைப்படுதல் இயலாது. இதனை அறியாமல் வாளா மூலாக்கினியை மட்டுமே வளர்த்தொழிகின்றார்கள் அறிவிலா மூடர்கள் என்கிறார் திருமூலர்.

மனித உடம்பு, ஊனுடம்பு, ஒளிஉடம்பு, வளி உடம்பு, மன உடம்பு, அறிவுடம்பு என்று ஐந்தாக உள்ளது. இந்த ஐந்து உடம்புகளும் தானே என்று நினைத்து, இயங்கும் ஊனுடம்பைச் சார்ந்திருக்கின்றது உயிர். இந்த உயிர் தான் உடம்பல்ல, தான் வேறு, உடம்பு வேறு என்னும் உண்மை அறிவு வரப் பெற்று விட்டால், சரியை, கிரியை, முதலான பதினாறு கலைகளும் அறியலாம். மேலும், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் முதலான சிவபோகம் வரையிலான பத்துநிலைகளை அடைய முடியும். மேலும் இதை அடைவதற்கான வேறு வழியாகிய சோடசக் கலையான பிராசாத யோகமாகும். இதையே சைவசித்தாந்தம் தசகாரியம் என்கின்றது. இதனை,

"தானான வண்ணமே கோசமும் சார்தரும்

தானாம் பறவை வனம் எனத் தக்கன்

தானான சோடச மார்கந்தான் நின்றிடில்

தானாம் தாசங்கமும் வேறுள்ள தானே" (Sivamaliga, 2018)

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது.

ஆறாதாரம் கடந்து பிராசாதக் கூறானப் பதினாறு நிலைகளில் இறைவனை தியானிப்பவர்கள் அவ்விறைவனின் திருவடியைக் காணலாம் என்பதை,

"நாலும், இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்

கொலிமேல் நின்ற குறிகள் பதினாறும்

மூலம்கண்டு ஆங்கே முடிந்து முதல் இரண்டும்

காலம் கண்டான்அடி காணலும் ஆமே" (Sivamaliga, 2018)

“ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்

மேதாதி நாதாந்தம் மீதுஆம் பராசக்தி

போதா ஆலயத்து அவிகாரம் தனில்போத

மேதாதி ஆதாரம் மீதான உண்மையே” (Sivamaliga, 2018)

என்னும் பாடலிலும், மும்மல காரியத்தால் பல காலம் கெடுதியை செய்துக்கொண்டிருந்த அவ்வுடல் இறைவன் தரிசனம் கண்டவுடன் அதுவே இன்பத்தின் விளைவிக்கும் விளைநிலம் ஆகும் என்பதை,

“தாது ஆதாரமாகவே தான்எழச் சாதித்தால்

ஆதாரம் செய்போகம் ஆவது காயமே” (Sivamaliga, 2018)

என்றும் பாடல் வழி அறியமுடிகிறது.

நீரில் போட்ட உப்பு நீரோடு நீராக இரண்டறக் கலந்து விடுவதைப் போல பிராசாத யோகத்தில் நின்று தவம் இயற்றுபவர்க்கு இறைவனோடு கலந்து இன்புறுவார்கள் என்பதை,

“அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்

செப்பு பராபரம் சேர்பரமும் விட்டுக்

கற்புறு சொற்பதம் மாளக் கலந்தமை

எப்படி அப்படி என்னும் அவ்வாறே” (Sivamaliga, 2018)

என்னும் பாடல் எடுத்தியம்புகின்றது.

இவ்வாறு மேலான தவநிலையினை மேற்கொள்பவர்கள் அடையும் பயனை பல்வேறு பாடல்களில் எடுத்துரைத்துள்ளார். மேலும் அவற்றுள் மேலான நிலை பிறவாமையாகிய வீடுபேற்று நிலையேயாகும்.

## முடிவுரை

திருமூலர் கூறும் யோகக் கலைகளில் சிறந்து விளங்குவது ஆதாரம் கடந்து திராதாரத்தில் இறைவனைக் காணச்செய்யும் வல்லமை கொண்ட பிராசாத யோகமேயாகும். பிராசாத யோகம் என்பது சிவஞானகதியைத் தருவதாகும். இந்த யோகத்தைத் திருமூலர் தன் பாடலில் பல்வேறு இடங்களில் எடுத்துக்கூறியுள்ளார். அவற்றை பற்கால சைவ ஆதின குருமார்கள் செய்யுளாகவும், யோகக்கலை ஆர்வலர்கள் விரிவாக்க நூல்களும் இன்றளவும் தோன்றிக்கொண்டு இருக்கின்றன. பிராசாத யோகம் இருபத்தி நான்கு கூறுகளைக்கொண்டது. அவற்றை காலபோத அடிப்படையில் எட்டு கூறுகளாகப் பிரிப்பார்கள். மேலும் அவற்றுள் சோடசகலை மிகவும் சிறப்புவாய்ந்தக் கலையாகும். இக்கலை எல்லாக்கூறுகளையும் தன்னுள் கைக்கொண்டதாகக் காணப்படுகின்றது. சோடசகலை தியானிக்கப்படும் காலம், இடம் கொண்டு 16 வகைப்படும். இவற்றையே பிற்கால தவயோகி வேதாத்திரி மகரிசியானவர் இக்கலையை எளிமையாக்கி மக்களுக்கு கொடுத்துள்ளார். இப்பிராசாத யோகத்தின் வழி உயிர் வெட்டவெளியைக் கடந்து சிவகளத்தில் இருக்கும் இறைவனை வேண்டி நிராதாரமாகத் தவம் இயற்றி தன்னை மாசற்ற பொருளாக உள்ள இறைவனுடன் நிலையுடைய பொருளாக மாற்றிக்கொள்வதே இவ்யோகத்தின் பயனாகும். இவற்றை சைவர்கள் முக்தி, வீடுபேறு, பிறவாமை என பலவாறாகக் கூறுவார்கள். ஆகவே நாமும் ஆதாரம் கடந்து நிராதார யோகம் குருமுகம் கைக்கொண்டு இறைஇன்பம் அடைவோமாகுக

## References

Ramakrishnan, N, 2004, Thirumoolarum Sivayookamum, Manivasagar Publication, Chennai, India.

Sivamaliga, (2016), Thimular Nadhanhta Kurippu - 11, Agathiyar Genoopadesam, Trichy, India.

Sivamaliga, (2018) Thirumanthiramum - Vethatiruyamum Nam Valvin Valithunai, Tissl Publication, Trichy,

Srimath Kuruganasampantha Swamigal, (1900) Soocetaklaap Prasada Satkam, Impiriyal Publication, Vaitheeswarankoil, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License